

சென்னை கிழக்கு மாவட்டம், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில், திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் கே.எஸ். ரவிச்சந்திரனை ஆதரித்து இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் – சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் பி.கே.சேகர் பாபு திரு.வி.க. நகர் தெற்கு பகுதி 76,75 ஆகிய வட்டங்களில் வீடு வீடாக சென்று வாக்கு சேகரித்தார். இந்த வாக்கு சேகரிப்பு கூட்டத்தில் மேயர் பிரியா ராஜன், பகுதி கழகச் செயலாளர் எம்.சாமி கண்ணு, தொகுதி பார்வையாளர்கள் என். கிருஷ்ணமூர்த்தி, அமுத அரசன், டி.லோகேஷ், தமிழ் செல்வி சசிகுமார் எம்.சி, ரமணி லோகேஷ் எம்.சி, வட்ட செயலாளர்கள் எஸ்.சசிகுமார், எஸ். வெங்கடேசன், பா.பி.தாஸ், வி.கே. வெங்கடேசன் மற்றும் கழக நிர்வாகிகள் தோழமை கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### திருப்பெரும்புதூர் தொகுதி வேட்பாளர் கு.செல்வப்பெருந்தகை

# குன்றத்தூர் தெற்கு ஒன்றியத்தில் வாக்கு சேகரிக்கிறார்!

### ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் அறிக்கை!

காஞ்சிபுரம், ஏப். 13 குன்றத்தூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

குன்றத்தூர் தெற்கு ஒன்றியத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி திருப்பெரும்புதூர் சட்டமன்றத் தொகுதி வெற்றி வேட்பாளர் கு.செல்வப் பெருந்தகை ஊராட்சிகள் தோறும் பொதுமக்களிடம் வாக்கு சேகரிக்கும் பிரச்சார நிகழ்ச்சி நடைபெறுகிறது.

திருப்பெரும்புதூர் சட்டமன்றத் தொகுதி வெற்றி வேட்பாளர் கு.செல்வப் பெருந்தகை நாளை (14.04.2026 - செவ்வாய்க் கிழமை) மாலை 4.00 மணி முதல் இரவு 8.15 மணி வரை பொதுமக்களிடம் வாக்கு சேகரித்து பிரச்சாரம் செய்திட உள்ளார்கள்.

எனவே இப்பிரச்சார நிகழ்ச்சியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளைச் சார்ந்த நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு பொதுமக்களிடம் வாக்கு சேகரிப்பு நிகழ்ச்சியை சிறப்பாக நடத்தித்தர வேண்டு மாய் கேட்டுக்கொள்கிறோம்.

வாக்கு சேகரிக்கும் நேரம், ஊராட்சி வருமாறு:

மாலை 4:00 மணிக்கு கரசங்காலில் வாக்கு சேகரிப்பை தொடங்கி, துண்டல்கழனி, சமத்துவபுரம், கீழ்படப்பை, படப்பை, ஆத்தனஞ்சேரி, சாலமங்கலம், நரியம்பாக்கம், சிறுமாத்தூர், காந்திநகர், புஷ்பகிரி, மலைப்பட்டு, சேத்துப்பட்டு, மணிமங்கலம் மேற்கு, இரவு08.15 மணிக்கு மணிமங்கலம் கிழக்கு ஊராட்சியில் வாக்கு சேகரிக்கிறார்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதியில்

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினை ஆதரித்து பிரச்சாரம்!

### சென்னை மேற்கு மாவட்ட சிறுபான்மை நல உரிமைப் பிரிவு அமைப்பாளர் எஸ்,எச்,ரஹமத்துல்லா தலைமையில்!

சென்னை, ஏப். 13- சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதியில் துணை முதல்வர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை ஆதரித்து சென்னை மேற்கு மாவட்ட சிறுபான்மை நல உரிமைப் பிரிவு அமைப்பாளர் எஸ்.எஜ்.ரஹமத்துல்லா தலைமையில் இஸ்லாமியர்களிடம் வாக்குச் சேகரித்தார்.

சேப்பாக்கம் திருவல்லிக்கேணி வெற்றி வேட்பாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை ஆதரித்து சென்னை மேற்கு மாவட்ட சிறுபான்மை நல உரிமை பிரிவு அமைப்பாளர் எஸ்.எச். ரஹ்மத்துல்லாஹ் தலைமையில் இஸ்லாமிய போதகர் பெரியவர் ஆமீர் கலிமி ஹாஜி ஹஜ்ரத் பீர் ஜாதா மன்சூர் அஹமத் ஆமிரி ஹாஜி அவர்களை சந்தித்து ஆதரவு திரட்டினர்.ஹஜ்ரத் பீர் அவர்கள் கூடி இருந்த இஸ்லாமிய மக்களிடம் வெற்றி வேட்பாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு ஆதரவு தர சொல்லியும் ஒவ்வொரு முஸ்லிம்களும் உதயசூரியனுக்கு வாக்களித்து உதயநிதி ஸ்டாலின் அவர்களை மிகப்பெரிய வெற்றியை ஈட்டு தாருங்கள் தமிழக முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் மீண்டும் முதல்வராவது உறுதி என்று மகிழ்வுடன் உரையாற்றினார்.



சேப்பாக்கம் திருவல்லிக்கேணி வெற்றி வேட்பாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை ஆதரித்து சென்னை மேற்கு மாவட்ட சிறுபான்மை நல உரிமை பிரிவு அமைப்பாளர் எஸ்.எச். ரஹ்மத்துல்லாஹ் தலைமையில் இஸ்லாமிய போதகர் பெரியவர் ஆமீர் கலிமி ஹாஜி ஹஜ்ரத் பீர் ஜாதா மன்சூர் அஹமத் ஆமிரி ஹாஜி அவர்களை சந்தித்து ஆதரவு திரட்டினர்.ஹஜ்ரத் பீர் அவர்கள் கூடி இருந்த இஸ்லாமிய மக்களிடம் வெற்றி வேட்பாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு ஆதரவு தர சொல்லியும் ஒவ்வொரு முஸ்லிம்களும் உதயசூரியனுக்கு வாக்களித்து உதயநிதி ஸ்டாலின் அவர்களை மிகப்பெரிய வெற்றியை ஈட்டு தாருங்கள் தமிழக முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் மீண்டும் முதல்வராவது உறுதி என்று மகிழ்வுடன் உரையாற்றினார்.

---

சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் - 2026 தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து



## மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமல்ஹாசன் எம்.பி. தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்

### தலைமைக் கழக அறிவிப்பு

| தேதி | மாவட்டம் | சட்டமன்ற தொகுதி |
|---|---|---|
| 17.4.2026 | சென்னை கிழக்கு | துறைமுகம் |
| | சென்னை வடக்கு | பெரம்பூர் |
| | சென்னை கிழக்கு | கொளத்தூர் |
| | சென்னை கிழக்கு | வில்லிவாக்கம் |
| 18.4.2026 | சென்னை தென்மேற்கு | தியாகராயர் நகர் |
| | சென்னை தென்மேற்கு | மயிலாப்பூர் |
| | சென்னை மேற்கு | சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி |
| | சென்னை தெற்கு | வேளச்சேரி |
| 19.4.2026 | திருப்பூர் வடக்கு | அவினாசி |
| | கோவை மாநகர் | கோவை தெற்கு |
| 20.4.2026 | திருச்சி தெற்கு | திருச்சி கிழக்கு |
| | திருச்சி மத்திய | திருவரங்கம் |
| | திருச்சி மத்திய | இலால்குடி |

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 11-04-2026.

தலைமைக் கழகம்,
தி.மு.க.

---

### மதுரை மாநகர் மாவட்டம் - மதுரை வடக்கு, மதுரை தெற்கு ஆகிய

# சட்டமன்றத் தொகுதிகளுக்கான தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு!

மதுரை மாநகர் மாவட்டம், மதுரை வடக்கு, மதுரை தெற்கு ஆகிய சட்டப்பேரவைத் தொகுதிகளில் தேர்தல் பணிகள் செம்மையாக நடைபெற்றிட தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**மதுரை வடக்கு தொகுதி தேர்தல் பணிக்குழு**

**தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள்** – அக்ரி கே.பி.டி.கணேசன், தீர்மானக்குழுச் செயலாளர், பி.பாக்கியநாதன், மாநில விவசாய தொழிலாளர் அணி துணைச் செயலாளர், டி.ஆர்.ரவிந்திரன், பொதுக்குழு உறுப்பினர், பொன்.மு.சேதுராமலிங்கம், மாவட்ட முன்னாள் துணைச் செயலாளர், எஸ்.ராகவன், மாவட்ட துணைச் செயலாளர், ஏ.கே.ஆறுமுகம், பொதுக்குழு உறுப்பினர், தா.ஜெயராஜ், எம்.சி. அ.சரவணன், நரிமேடு பகுதி செயலாளர், டி.ஏ.குரும்பன், செல்லூர் பகுதி செயலாளர் பி.அறிவுநிதி, கே.கே.நகர் பகுதி செயலாளர், ஜி.ராதாகிருஷ்ணன், கோரிப்பாளையம் பகுதி செயலாளர், எஸ்.சித்திக், அண்ணா நகர் பகுதி செயலாளர். என்.எம்.புண்ணியமூர்த்தி, கோ.புதூர் பகுதி செயலாளர், அண்ணாநகர் ஜெகநாதன், முன்னாள் எம்.சி., ப. அண்ணாதுரை, தேவசேனன், வழக்கறிஞர் அணி அமைப்பாளர், தாய் முரளி, எம்.சி., கே.மார்நாடு, எம்.சி.,

**மதுரை தெற்கு தொகுதி தேர்தல் பணிக்குழு**

**தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள்** – பொன்.முத்துராமலிங்கம், உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர், வ.வேலுசாமி, தணிக்கைக்குழு உறுப்பினர், மா.முகேஷ் சர்மா, தெப்பக்குளம் பகுதி செயலாளர், மின்னல்கொடி, தலைமைச் செயற்குழு முன்னாள் உறுப்பினர், ஆர்.முருகவேல், மாவட்ட பொருளாளர், ப.ரமேஷ்குமார் (எ) ஜீவன், தெற்கு வாசல் பகுதி செயலாளர், போஸ் முத்தையா, வில்லாபுரம் பகுதி செயலாளர், ஆர்.எம்.முத்து, காமராஜபுரம் பகுதி செயலாளர், அ.அன்வர்உசேன், நெல்பேட்டை பகுதி செயலாளர், திலீபன் சக்கரவர்த்தி ஏ.எஸ்.சையதுஅபுதாகீர், எம்.சி., திருமதி விஜயலட்சுமி பாண்டியன், எம்.சி., ஏ.அருண்குமார், எம்.சி., எம்.உதயகுமார், மாவட்ட முன்னாள் துணைச் செயலாளர், பி.வி.எஸ்.சேகர், செல்வராஜ், பி.சுப்பிரமணி, மாவட்ட விவசாய அணி அமைப்பாளர், கே.ஏ.உஸ்மான்அலி, சிறுபான்மையினர் நலஉரிமை பிரிவு அமைப்பாளர்

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18
நாள் :12.04.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

---

சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் - 2026 தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து



## அனைத்திந்திய பாட்டாளி முன்னேற்றக் கட்சி சி.என்.ராமமூர்த்தி தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்

### தலைமைக் கழக அறிவிப்பு


| தேதி | சட்டமன்ற தொகுதி |
|---|---|
| 13.04.2026 | மயிலாப்பூர், அம்பத்தூர் |
| 14.04.2026 | ராணிப்பேட்டை |
| 15.04.2026 | திருப்பத்தூர் |
| 16.04.2026 | தருமபுரி |
| 17.04.2026 | ஆரணி |
| 18.04.2026 | போளூர் |
| 19.04.2026 | குன்னம் |
| 20.04.2026 | திண்டுக்கல் |
| 20.04.2026 | ஆத்தூர், திண்டுக்கல் மாவட்டம். |
| 21.04.2026 | திருச்சி கிழக்கு |
| 22.04.2026 | நெய்வேலி |

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 10-04-2026.

தலைமைக் கழகம்,
தி.மு.க.

---

சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் - 2026 தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து



## தமிழர் தேசம் கட்சித் தலைவர் கே.கே.செல்வகுமார் தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்

### தலைமைக் கழக அறிவிப்பு

| நாள் | மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி |
|---|---|---|
| 14.4.2026 | திருச்சி வடக்கு | முசிறி |
| | திருச்சி வடக்கு | மணச்சநல்லூர் |
| | கரூர் | குளித்தலை |
| | புதுக்கோட்டை வடக்கு | விராலிமலை |
| | புதுக்கோட்டை தெற்கு | திருமயம் |
| 15.4.2026 | சிவகங்கை | சிவகங்கை |
| | தஞ்சை தெற்கு | ஒரத்தநாடு |
| | தஞ்சை தெற்கு | பட்டுக்கோட்டை |
| | தஞ்சை தெற்கு | பேராவூரணி |

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 12-04-2026.


தலைமைக் கழகம்,
தி.மு.க.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# சா. கணேசன்

### ஏப்ரல் 13 (2018)



தனது இளமை காலத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்து கொண்ட இவர், பி அன்ட் சி மில் அங்காடி விற்பனையாளராக இருந்தபோதே தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோருடன் பழகியவர்.

1959, 64, 68 ஆகிய மூன்று முறை தொடர்ந்து மாமன்ற உறுப்பினராகவும் – 1970–ல் சென்னை மாநகர மேயராகவும் – தியாகராய நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

சென்னை மாநகர மக்களின் அடிப்படை பிரச்னைகளை தீர்த்து வைப்பதில் தனி முத்திரை பதித்தவர், இவர், கவுன்சிலர் என்ற முறையில் மாநகர பேருந்துகளில் பயணித்து மக்களின் குறைகளை நேரடியாக அறிந்ததோடு, மேயராக இருந்த போது மும்பை மேயர்கள் மாநாட்டில் பங்கேற்று வரலாற்று சிறப்பு மிக்க தீர்மானத்தை நிறைவேற்றி, தமிழகத்திற்கும் கழகத்திற்கும் பெருமை சேர்த்தவர். கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்துகொண்டு சிறை சென்றவர்.

“தன்னலம் பார்க்காமல் கட்சிக்காக உழைத்த, சுயநலம் பார்க்காமல் பொதுநலம் ஒன்றை மனதில் வைத்து, இந்த மாநகர மக்களின் அடிப்படை வசதிகளை நிறைவேற்றுவதற்காக பாடுபட்ட ஒரு தொண்டரின் படத்தை; தொண்டர் என்பதை விட மக்களின் ஊழியரின் படத்தை அதுவும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மக்கள் ஊழியரின் படத்தை இங்கே திறந்து வைத்திருக்கிறேன்.” என கழகத் தலைவர் அவர்கள் இவரது படத்திறப்பு விழா உரையில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# குடந்தை மிசா இரா. துரை

### ஏப்ரல் 13 (2010)



மாணவப் பருவத்திலேயே தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரின் மேடைப் பேச்சுக்களால் ஈர்க்கப்பட்டு கழகப் பணிகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் குடந்தை இரா.துரை அவர்கள்.

கழகம் தொடங்கப்பட்ட அன்றே உறுப்பினராக இணைந்தவர். 1962ஆம் ஆண்டில் நடைபெற்ற விலைவாசி உயர்வுப் போராட்டத்தில் கலந்து கொண்டு மூன்று மாத கடுங்காவல் தண்டனை பெற்று சிறைவாசம்; அவசரநிலை காலத்தில் மிசா கைதியாக ஓராண்டு சிறைவாசம் மட்டுமன்றி, கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் கலந்துகொண்டு சிறை சென்றவர்.

குடந்தை நகரக் கழகச் செயலாளராக 30 ஆண்டுகளுக்கும் மேல் பணியாற்றிய இவர், அதற்கு முன்னர் நகரக் கழகப் பொருளாளராகவும், வட்டக் கழகச் செயலாளராகவும் பல ஆண்டுகள் பணியாற்றினார். 1971ஆம் ஆண்டு முதல் குடந்தை நகரமன்ற உறுப்பினராகவும், நகர்மன்றத் தலைவராகவும் பணியாற்றியவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**